RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2013

# சீவகசிந்தாமணியில் சீவகனின் நட்பு உறவுகள்

மு. பிரேமா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்-627802, தமிழ்நாடு, இந்தியா

# Sivagan's Friendly Relations in Jivaka Chintamani

**M. Prema** [a, *]

[a] Department of Tamil, Sri Parasakthi College for Women, Courtallam-627802, Tamil Nadu, India

* Corresponding Author: premakannan1993@gmail.com

Received: 20-06-2022
Revised: 11-09-2022
Accepted: 30-09-2022
Published: 05-11-2022

**ABSTRACT**

Civaka Chintamani is one of the five great epics that have appeared in the Tamil language. It was first made up of Vritthappa (a kind of 4-line verse). The four meanings of righteousness, materialism, happiness, and home are dealt with in this. Dhandiyalangaram has the distinction of matching the great epic grammar. It consists of 3145 songs and thirteen sections. In this epic, it reveals the history of Sivagan, the way of life as a king who conquers the lost country and rules the scepter, and the friendship between Sivaka and Padumukhan, Buddhi Senan, Vijayan, and Uloha Balan. This article examines the fact that it was the comrades and the friendship between them that were the fundamental reasons for Sivagan to attain a higher position in his life.

**Keywords:** Civaka Chintamani, Friendship, Grammar, Dhandiyalangaram, Materialism

## முன்னுரை

தமிழ் மொழியில் தோன்றியுள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சீவகசிந்தாமணி. முதன் முதலில் விருத்தபாவால் ஆனது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருளும் உரைப்பது. தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பிய இலக்கணங்கள் பொருந்தியுள்ள சிறப்பினை உடையது. பதின் மூன்று இலம்பகங்களையும் 3145 பாடல்களை உடையது. இக்காப்பியத்தில் சீவகனின் வரலாற்றையும் இழந்த நாட்டை கைப்பற்றி செங்கோலாட்சி செய்யும் மன்னனாக வாழும் வாழ்க்கை முறையையும், சீவகனுக்கும், பதுமுகன், புத்தி சேனன், விசயன், உலோக பாலன் ஆகியோருக்கு ஏற்பட்ட நட்புறவையும் வெளிப்படுத்தும் நிலை பல்வேறு இடங்களில் காணப்படுகிறது (Thamizhannal, 2016). சீவகன் தனது வாழ்க்கையில் உயர்வான நிலையை அடைவதற்கு அடிப்படைக் காரணமாக திகழ்ந்தவர்கள் தோழர்களும் அவர்களிடையே கொண்டுள்ள நட்புறவும் தான் என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## ஆய்வுமுறை

தமிழ்மொழியின் இளமைக்கும் வளமைக்கும் சான்றாக இருப்பவை காப்பியங்கள். கதைச் - செறிவாலும் காப்பிய நடையாலும் ஏறுபோல் நடைபெறும் தன்மையாய் விளங்குவது சீவக சிந்தாமணி என்றால் அது மிகையாகாது. ஏமாங்கத நாட்டு அரசன் சச்சந்தனுக்கும், அரசி விசையைக்கும் பிறந்த சீவகனின் வரலாற்றையும், கட்டியங்காரனின் சூழ்ச்சியால் இழந்த நாட்டை மீட்கும் போராட்டக் களத்தை அடிப்படையாகக் கொண்ட சமணசமயம் காப்பியமாகும். காப்பியத் தலைவன் சீவகனுக்கு பதுமுகன், விசயன், புத்தி சேனன், உலோக பாலன் ஆகியோர் நட்புறவு என்ற உன்னததன்மை

மேலோங்கும் விதத்தில் ஒவ்வொரு இடத்திலும் ஆற்றிய பங்கு மிகவும் பெருமைக்குரியது. போரில் வெற்றி பெற்ற சீவகன் தனக்குரிய பெண்ணை தன் உயிர் தோழன் பதுமுகனுக்கு திருமணம் செய்து வைத்தல், சீவகன் நண்பனுக்கு வில்வித்தை கற்றுக் கொடுத்தல், சீவகனை காணாமல் நண்பர்கள் வேதனை அடைந்த விதம், சீவகன் தாயை தோழர்கள் கண்டு தலைவன் பிறப்பு வரலாற்றை அறிதல், சீவகனை தாயிடம் ஒப்படைத்தல், சீவகனை நண்பர்கள் காண்பதற்கு வேடமிட்டு செல்லுதல், இறுதியில் தாய் மகன் இருவரையும் சேர்த்து காப்பியத் தலைவனை மன்னனாக வாழ்வதற்கும் முழுக்க முழுக்க நட்புறவு ஏற்பட்ட வியப்பு செய்திகளை உள்ளடக்கியதாக இவ்வாய்வு அமைகிறது.

## சீவகன் பதுமுகன் நட்புறவு

ஆயர்களின் தலைவனாகிய நந்தகோபாலன் தங்களுடைய பசுக்களை பகைவராகிய கட்டியங்காரனின் போர் வீரர்கள் கவர்ந்து சென்றார்கள். அதனை அறிந்த நந்தகோபாலன் ஆநிரையை மீட்டு வருமாறு கட்டளையிடுகிறான். ஆநிரையை மீட்டு வரும் மைந்தருக்கு பேரழகு உள்ள என் திருமகளாகிய கன்னிகை கோவிந்தனயை தருவேன் என வீதிகள் எங்கும் முரசறைந்தான். அதனை உணர்ந்த சீவகன் போர்க்கோலம் கொண்டு களம் சென்றான். ஐம்பத்தாறாயிரவராயினும் அவர்கள் தனக்கு பகைவரல்லர் எனக் கருதி போரில் வெற்றி பெற்று ஆநிரையை மீட்டு வந்தான். இதனையறிந்த நந்தகோபன் சீவனுக்கு தன் மகள் கோவிந்தையை மணம் செய்து கொடுக்க முன் வந்தான்

“ஏறங்கோண் முழங்க வாய

ரெடுத்துக் கொண் டேகி மூதூர்ச்

வீறுயர் கலச நன்னீர்

சொரிந்தனன் வீர னேற்றான்

பாறுகொள் பருதி வைவேற்

பதுமுக குமரன் கென்றே”

இடையர் ஏறுகோட்பறை முழங்க கோவிந்தையை அழைத்துக் கொண்டு கந்துகன் மனையில் புகுந்தார்கள் சீவகனுக்கு பருந்துகள் சூழும் ஞாயிறு போன்ற கூரிய வேல் ஏந்திய பதுமுகனுக்கு என்று கோவிந்தையை உயிர் நண்பனுக்கு திருமணம் செய்து வைத்தான் என்பது புலனாகிறது. இவ்வாறாக தான் திருமணம் செய்யும் தலைவியை தன்னுடைய உயிர் தோழனுக்கு திருமணம் செய்துவித்ததன் மூலம் நட்பின் மேன்மையையும் இங்கு அறியமுடிகிறது (Thiruthakka Devar, 2020).

## சீவகன் நண்பர்களுக்கு வில்வித்தை கற்பித்தல்

சீவகன் பல இடங்களை எல்லாம் கடந்து மத்திம தேயத்தை அடைந்தான். அந்நாட்டின் அரசன் தடமித்தன். அவன் புதல்வன் விசயன் ஏமமாபுரம் அருகில் உள்ள ஒரு பூஞ்சோலையில் சீவகனை கண்டான் சீவகன் தன்னை பற்றி எதுவும் விசயனிடம் கூறவில்லை. அச்சோலையில் பலமுறை முயன்றும் விசயனால் வீழ்த்தப்படாத மாங்கனி யொன்றைத் தன் ஓரம்பால் வீழ்த்தி அம்பும் மாங்கனியும் தன் கையில் வர பெறச் செய்தான் சீவகன்

“வண்சிலை கொண்ட வாறும்

வார்கணை தொடுத்த வாறுங்

கண்கணை வைத்த வாறுங்

கற்செய்தோ திருத்த வாறுந்

திண்சரம் விட்ட வாறுஞ்

சென்றகோல் போந்த வாறுங்

கண்டெலாம் வியந்து நோக்கி

வில்லுடைக் கடவு ளென்றான்”

வில்லை ஏந்திய வகையையும், சிறப்பாக நின்று நீண்ட அம்பைத் தொடுத்த படியையும், மலை போன்ற தோள்களை பிறழாமல் கணையை விட்டதும் பார்த்து வியப்புற்றுச் சீவகனை நோக்கி நீ வில்லை படைத்த இறைவன் என்றான் விசயன் பின்பு தன் தந்தையான தடமித்தனிடம் அறிமுகப்படுத்தினான். தடமித்தன் தன்னுடைய புதல்வர்கள் அனைவருக்கும் வில்வித்தையை கற்பிக்கும் படி சீவனை நியமித்தார். இவ்வாறாக காப்பியத் தலைவன் தனக்கு தெரிந்த கலையை தன் நண்பர்களுக்கு கற்பிக்கும் நிலையும், வில்வித்தையால் சீவனுக்கும் விசயனுக்கும் இடையே ஏற்பட்ட நட்பு என்னும் உன்னதமான உறவு மேம்பட்டமையும் அறிய முடிகிறது (Thiruthakka Devar, 2020).

## சீவகனை காணாமல் தோழர்கள் வேதனை

கனகமாலையை திருமணம் செய்து கொண்டான் சீவகன் இச்செய்தி அறியாது சீவகனை காணாமல் வேதனையுடன் காந்தருவதத்தையை அடைந்தார்கள் சீவகனின் அன்பான தோழர்கள். சீவகன் ஏமமாபுரத்தில் இருப்பதை அறிந்து புறப்பட்டுச் சென்றார்கள். அருவிகளும் மலைகளும் உடைய செல்வம் இல்லாத வறியவர் வாழும் நாடுகளில் சீவகன் உளனோ என்று ஆராய்ந்து சென்று தாபதர் வாழும் பள்ளியிலே உலோகபாலன், புத்திசேனன், பதுமுகன், விசயதத்தன் ஆகிய நண்பர்கள் படைவீரர்களுடன் தங்கினார்கள். அங்கு திருமகள் போலே ஒளி வீசும் விசையை பார்த்தனர். குலத்தையும் வருகையையும் நீர் கூறுமின் என்று விசயை வினவினாள். நண்பர்கள் இராசமாபுரம் குறித்தும் தங்களுடைய உற்ற நண்பன் உயிர் தோழன் சீவகனை பற்றியும் அவனை காணாமல் நாங்கள் அடைகின்ற வேதனை

“எங்கள் வினை யாலிறையவன் வீடியோவும் ஞான்றே

யெங்களுயிர் நம்பியொடு யாங்கள்பிறந் தேமா

வெங்கடேசன் நம்பிக்கிவர் தோழரென வீந்தா

ரெங்கெழிலென் ஞாயிறென வின்னணம்வ ளர்ந்தேம்”

என்ற பாடல் வரிகள் சுட்டுகிறது. எங்களது உயிர் போலும் தம்பியுடன் யாங்கள் பிறந்தோம். எங்கள் உறவினர் எம்மை இவர்கள் நம்பிக்குத் தோழர் என்று கொடுத்தார். எங்கே எங்களுடைய எழில் போன்ற ஞாயிறு, என வளர்ந்து வந்தோம் என்று தோழர்கள் விசயையிடம் கூறினார்கள் என்பதை விளங்கமுடிகிறது (Thiruthakka Devar, 2020).

“எந்தலைத் தோழர் ரெல்லா

மினையடி பொழுது வீழ்ச்

சேந்தன கண்ணி னாலுந்

திண்ணெழிற் றோளி னாலும்

வாய்ந்தவின் சொல்லி னாலு

மாலைதாழ் முடியினாலு

மாய்ந்தவன் சிறப்புச் செய்தா

வைலநோ யாவரும் தீர்ந்தார்”

சீவகனை அவன் தோழர் எல்லாரும் அரசன் என்று தெரிந்தமையால் அடிகளில் வணங்கி வீழ சிவந்த கண்களாலும், திண்ணிய அழகிய தோளினாலும் பொருந்திய இனிமையான மொழியினாலும் மாலை தாங்கிய முடியாலும், சீவகன் ஆய்ந்து சிறப்புச் செய்தான். தனது நண்பர்களை பார்த்ததும்

பேரானந்தம் கொண்டான் நந்தட்டனிடம் இவர்கள் என் உயிர் தோழர்கள் என்றான் அவர்களும் துன்ப நோய் தீர்த்தார்கள் (Thiruthakka Devar, 2020).

## சீவகன் தாயை தோழர்கள் காணல்

தவப்பள்ளியில் விசயையை தோழர்கள் பார்த்தனர். விசயை தோழர்களை நோக்கி தன் வரலாற்றைக் கூறினாள். தோழர்கள் தாம் எதற்கு வந்தோம் என்று சொன்னார்கள். இராசமாபுரத்தில் கந்துக்கடன் என்று அழைக்கப்படும் முதிய நாயகன் முதலில் பெற்ற மகன் பெருமை மிக்க வில்லேந்திய பெருங்கையையுடையவன். நினைப்பவர்களின் துன்பத்தை நீக்கும் சீவகன் எனப்படுவோன். அச்செய்தியை கேட்ட விசயை மயங்கி விழுந்தாள் அழுது புலம்பினாள் அவனே தனது பிள்ளாய் என்றும் அரசன் மகனே, குருகுலத்திற்கு பிறந்த சிங்கமே, நாட்டின் அரசே எனக்கு இனிய உயிரே என்னை பாராமலே போகிறாயோ? என்று வருத்தம் தெரிவித்தாள் இவ்வாறு நண்பர்கள் தம்முள் ஒருவரையொருவர் நோக்கி மகிழ்ந்து அவளை சீவகனின் நற்றாய் என்றும் சீவகன் இராஜகுமாரன் என்று அறிந்து கொண்டனர் மற்றும்

"வீழ்ந்து மயில் போல் விசயை கிடந்தாளைத்

தாழ்ந்து பல தட்பந் தாஞ்செய்ய வேல் பெற்றுப்

போழ்ந்தகன்ற அவள் புலம்பா வெழுந்திருப்பச்

சூழ்ந்து தொழுதிறைஞ்சிச் சொன்னா ரவன்றிறமே"

புலம்பி அழுத விசயையிடம் சீவகன் உயிரோடு இருப்பதை கைகுவித்து வணங்கி சூழ்ந்து கூறினார்கள் இவ்வாறாக சீவகன் தாய் விசயை என்கிற உண்மையையும் சீவகன் உயிரோடு இருக்கின்ற செய்தியை விசையைக்கு தோழர்கள் உணர்த்தியமையும் சீவகனின் வரலாற்றை அறிந்தமையும் விளங்க முடிகிறது (Thiruthakka Devar, 2020).

என்னுடைய கணவன் இறந்த பின்பு நான் மிகுந்த துன்பம் அடைந்தேன் இந்த செய்தியை என் அய்யனுக்கு உணர்த்தி அவனை என்னிடம் அழைத்து வாருங்கள் என்றாள் விசயை. தோழர்கள் வணங்கி தாயே ஒரு திங்களுக்குள் சீவகனை நும்பால் அழைத்து வருவோம். நீவிர் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு சீவகனை நாடி புறப்பட்டனர். இவ்வாறாக அவனையும் அவனது தாயான விசயையும் கண்டறிந்து இருவரையும் ஒன்று சேர்த்தவர்கள் உயிர் தோழர்கள் என்பதும் அறிய முடிகிறது.

## சீவகனை தோழர்கள் சந்தித்தல்

தோழர்கள் ஏமமாபுரத்தில் சீவகன் இருப்பதை அறிந்து கொண்டு நந்தட்டனுடன் இருக்கும் சீவகனை சந்திப்பதற்கு போர் செய்பவர்களைப் போல வேடமிட்டு சென்றார்கள். அரசனின் பசுக்களை கவர்ந்தார்கள் இதனால் சினம் கொண்ட அரசன் பெரும் படைச் சூழ தேர் மீது ஏறி போர் செய்தற்கு நந்தட்டனோடு சீவகனும் வந்தான். அவனை கண்ட "பதுமுகன் அடியேன் நின் திருவடி நிழலில் உறைய வேண்டிச் சச்சந்தன் மகனாகிய நின்னைக் காண வந்தோம்" என்று எய்திய அம்பு சென்று சீவகன் தேர் மீது மாறி வீழ்ந்தது இக்கணையை எறிந்தவன் பதுமுகன் என்று

"தார்மலி மார்பன் றிண்டேர்

தோன்றநலு தறுகண் மைந்தன்

சீர்மலி பகழி யேந்திப்

பதுமுகன் சிலை தொட்டானே"

இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன (Thiruthakka Devar, 2020). இவ்வாறாக சீவகன் போரில் அம்பு வீசியமையும் தன் உயிர் தோழர்களை அடையாளம் கண்டு கொண்டமையும் அறிய முடிகிறது.

சீவகன் எந்த ஒரு முடிவு எடுக்கும் போதும் நண்பன் அது பதுமுகனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது நட்பிற்கு இன்றியமையாததாக விளங்குகிறது

“முருகொப் புளிக்குங் கண்ணி

முறிமிடை பாடலை மாலைக்

பருகுபைங் கழலி னாருட்

பதுமுகன் கேட்க வென்றே”

தேன் சிந்தும் அழகிய தலை மாலையினையும், தளிர் வகை மாலையினையும், சிவந்த நீரை உமிழும் வேலினையும் உடைய சீவகனும் குதிரை மீதேறி செல்வதற்கு முன்பாக அதாவது தன் தாயான விசையை உயிரோடு இருப்பதை தோழர்களின் வாயிலாக அறிந்தவுடன் புறப்பட்டு செல்கிறான். செல்வதற்கு முன்பாக பொன் பொருந்திய அழகிய கழலணிந்த தோழர்களில் பதுமுகனை கேட்பாயாக என விளித்து கூறுகிறான் சீவகன் தம்பி நந்தட்டன். சீவகன் வாழ்க்கையின் எந்த ஒரு முடிவு எடுப்பதற்கும் தனது உயிர் தோழன் பதுமுகனையே கேட்கிறான் இதன் மூலம் சீவகன் நட்புறவுக்கு கொடுக்கும் முக்கியத்துவமும் நட்புறவின் மேன்மையும் வெளிப்படுவது புலனாகிறது (Thiruthakka Devar, 2020).

## முடிவுரை

போரில் வெற்றி பெற்ற சீவகன் கோவிந்தையை திருமணம் செய்யாமல் தன் உயிர் தோழன் ஆகிய பதுமுக்கு திருமணம் செய்து வைத்தான். காப்பியத் தலைவன் தனக்குத் தெரிந்த வில்வித்தையை தன் நண்பனாகிய விசயனுக்கும் மற்ற சகோதரர்களுக்கும் கற்றுக் கொடுக்கிறான். சீவகனை காணாமல் அவனின் தோழர்கள் மிகுந்த வேதனை அடைந்தார்கள் விசயையிடம் சீவகன் உயிரோடு இருப்பதையும் தலைவனிடம் தாய் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதையும் உணர்த்தியவர்கள் தோழர்களே. சீவகனை தாயிடம் ஒரு திங்களுக்குள் ஒப்படைத்து விடுகிறோம் என்று விசையைக்கு நம்பிக்கை கொடுத்தவர்களும் சீவகனின் தோழர்களே. சீவகன் மன்னனாக நாட்டைக் கைப்பற்றவும் மக்களுக்கு நல்லாட்சி புரியவும் உற்றத் துணையாக இருப்பவர்கள் நட்பு என்னும் உறவு தான் என்பதை இக்காப்பியத்தின் வழி புலனாகின்றது. சீவகன் நாட்டு மன்னனாக இருந்தாலும் தனது தோழர்களோடு மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டவனாக இருந்தமையும் ஏனைய நண்பர்களும் தலைவன் மீது பேரன்பு அக்கறையும் கொண்டு வாழ்ந்து வந்தமை பல்வேறு இடங்களில் அறிய முடிகிறது. நட்பு என்னும் உறவு தான் சீவகன் இழந்த, நாட்டையும் பெற்ற தாயையும் அடைவதற்கு முக்கிய காரணமாகவும் அடிப்படையாகவும் இருந்தமை புலப்படுகின்றது.

## References

Thamizhannal, (2016) Puthiya Nokkil Tamil Ilakkiya varalaru, Chennai, India.

Thiruthakka Devar, (2020) Seevaka Sinthamani Mulamum Uraium, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License